**தென்பகுதி வீதி இணைப்புச் செயற்திட்டம் (அதிவேகபாதை இணைப்பு முன்னேற்றத் திட்டம்) - 2018**

தென்பகுதி வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மே 24 ஆந் திகதிய 3028 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. அதிவேக வலையமைப்பை இணைக்கின்ற தேசிய நெடுஞ்சாலைகளின் திரையிடல் சாத்தியவள ஆய்வு மற்றும் விபரமான பொறியியல் வடிவமைப்புக்கள் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 790.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 6 மில்லியனானதுடன் அதில் ரூபா 659 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை ரூபா 131.80 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 ஆகஸ்ட் 22 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2019 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**விடயத்தின் மீதான தாக்கம்**

அபிப்பிராயத்தை முனைப்பழி செய்யாது செயற்திட்டத்தின் வேலை நிகழ்ச்சித்திட்டத்தை விபரிக்கின்ற நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 04 இற்கு (வேலை நிகழ்ச்சித்திட்டம்) எனது கவனத்தை செலுத்துகின்றது. அதற்கமைய 2018 - 2027 இற்கான தேசிய வீதி பெருந்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு 2014 ஆம் ஆண்டிலிருந்து செயற்திட்டத்தினால் அனுப்பப்பட்ட ஆலோசனையாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட உள்ளீடுகளின் பற்றாக்குறை காரணமாக, 2018 திசெம்பர் 31 வரையிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| விபரம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2018 தொடக்கம் 2027 வரையான ஆர்டிஏ இன் வீதி பெருந்திட்டத்தினால் இரண்டு செயற்றிட்ட ஆலோசகர்களின் சேவைகள் பெறப்பட்டிருந்தது. இருப்பினும், வீதி பெருந்திட்டமானது 2018 திசெம்பர் 31 வரையிலும் இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை. | வீதி வடிவமைப்பை பூர்த்தியாக்குவதில் கால தாமதம் ஏற்படுவதற்கான சாத்தியம். | பெருந் திட்டத்தின் இறுதி தயாரிப்பு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | செயற்றிட்டத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நீர்கொழும்பு – கிரியுள்ள, தம்ப – கொட்டாவ, கொட்டாவ – தலகல மற்றும் காலி – பத்தேகம என்ற பெயரையுடைய 04 தேசிய வீதிகளின் 28 கிலோமீற்றர்களுக்கான விபரமான வரைபடம் ஆலோசகர்களினால் பூர்த்தியாக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும், தொடர்புடைய வீதிகள் உண்மையாக தீர்மானிக்கப்பட்ட வேலைகளின் | அங்கீகரிக்கப்படாத வேலைச் செயற்பாடுகள் காரணமாக செயற்றிட்டத்தின் கிரயம் அதிகரித்தது. | விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட வீதிகளின் பட்டியல் பின்னர் திருத்தியமைக்கப்பட்டிருந்தது . | தேசிய திட்டத்தின் பிரகாரம் வீதி முன்னுரிமை பட்டியல் பேனப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பரப்பெல்லையில் உள்ளடக்கப்பட்டுக் காணப்படவில்லை. | | | |
| (ஆ) | 30 வீதிகளின் 250 கிலோமீற்றர்களின் சாத்தியவள ஆய்வு மற்றும் விபரமான வரைபடத்தின் தயாரிப்பை செயற்திட்டமானது பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் 2019 மார்ச் 14 இல் உள்ளவாறு புனரமைப்பு நோக்கங்களுக்காக 03 வீதிகளின் 24 கிலோமீற்றர்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டிருந்தது. 2019 மார்ச் 14 இல் உள்ளவாறு 02 வீதிகளின் 24 கிலோமீற்றர் இன் புனரமைப்பு வேலைகள் மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது . | வீதி வடிவமைபிற்காக ஏற்பட்ட செலவு பலனற்றதாகியது. | காணி சுவீகரிப்பு நோக்கத்திற்கான நிதி ஒதுக்கீட்டில் காணப்பட்ட வறையறை காரணமாக வீதி வேலைகளின் ஆரம்பிப்பு தாமதமடைந்து கானப்பட்டது. | வடிவமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்த பின் உடனடியாக வீதி புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். |